1979 மார்ச் 14]

நூலகக் கட்டிடம் வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்து உள்ளதா? அதைப்பற்றி பரிசீலித்து இந்த ஆண்டாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

திரு. சேலம். மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டிடங்கள் வசதி அற்ற நிலையில் இருப்பதால், படிப்பதற்குக் கூட வசதி இல்லாமல் இருப்பதால், அரசு அதை உணர்ந்து உடனடியாகச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வாடகைக் கட்டிடமா, சொந்தக் கட்டிடமா என்பதை விட வசதிகளைக் கொண்ட கட்டிடமாக இருக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் எந்தெந்த மாவட்ட நூலகங்களுக்கு கட்டிடங்கள் தேவை என்கிற அடிப்படையில் கட்டிடம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிச்சயமாக அந்தக் குறையைப் போக்க அரசு முயலும்.

மதிய உணவுக்கான தொகை வழங்கல்

*வினா எண் 388 திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள நீதி உதவி ஆரம்பப் பாடசாலை (காலனி)யில் வழங்கப்பட்ட மதிய உணவுக்கான தொகை ரூ. 965 வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அத்தொகையை அப்பள்ளிக்கு உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்கும்படி திண்டிவனத்திலுள்ள மாவட்டக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. மொ. பரமசிவம்: தலைவரவர்களே, திண்டிவனம் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் மதிய உணவு வழங்கியதற்காக 1975 ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் உள்ள பாக்கி ரூ. 965

வழங்கப்படாமல் இருக்கிறது. இந்த பாக்கியை பள்ளிக்கல்வி இயக்குநர் வழங்கவேண்டுமா, அரிசன நலத்துறை இயக்குநர் வழங்க வேண்டுமா என்ற பிரச்னை இருக்கிறது. ஆகவே, இது குறித்து அரசு இறுதி முடிவு சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநா தெரிவித்த முடிவுப்படி, இப்போது மாவட்ட கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்.

அரிசனநல சங்கம் என்ற பெயரால் வசூலிக்கப்பட்ட தொகை

*வினா எண் 389 திரு. கு. ரமணி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை நகர எல்லையில் உள்ள வாலாங்குளம் பகுதியில் அரிசனநல சங்கம் என்ற பெயரால் சிங்காநல்லூர் நகரமன்ற மாஜி உறுப்பினர் ஒருவர் ரூ. 12,000 வரை வசூலித்து அரிசனங்களை ஏமாற்றியுள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விபரங்கள் என்ன?

(இ) அரிசனங்களின் உரிமைகளை பாதுகாக்க என்ன செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) சிங்கா நல்லூர் நகராட்சியின் முன்னாள் உறுப்பினர் திரு. முனியப்பன், புலியகுளம் கிராமம் (வாலாங்குளம் பகுதி) பொது மக்களிடமிருந்து வீட்டு மனை நிலப்பட்டா பெற்றுத் தருவதாக வாக்களித்து ஒவ்வொருவரிடமும் ரூ. 200 வீதம் ரூ. 12,000 வசூலித்ததாக தெரிய வந்துள்ளது என்று கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இது குறித்து புலன் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

(இ) அந்தப் பகுதியில் அரிசன மக்கள் இது போன்றவர் களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் குடியிருக்க இடம் இல்லாமல் இருப் பதால், இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பல முறை விண்ணப்பங்கள் போட்டும், அது மறுக்கப்படுவதால், இந்த மாதிரி சூழ்நிலை ஏற்பட்டு வருவதை அரசு கவனத்தில் எடுத்துக்